காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

பார்த்தாராமே! இன்னும் என்ன?

மலர் 1 29—11—64 இதழ் 19

பெருமழை காரணமாக சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகள் பாழாக்கப்பட்டு, ஏழை எளியவர்கள் இடமின்றி இடர்ப்படுகிறார்கள் அல்லவா; 'நம்ம' சர்க்கார், அக்கறையற்று இருந்துவிடுகிறதே என்று ஆயாசப்படுகிறீர்களா! ஆயாசம் அகற்றுமின்!! 'நம்ம' சர்க்காரின் பெரியவர், முதலமைச்சர் பக்தவத்சலம் வெள்ளக்காடான பகுதிகளுக்குச் சென்று பார்த்தாராம்! இன்னும் என்ன குறை!!

ஆவன செய்வதாகக்கூடச் சொல்லிவிட்டாராம்—போதாதா!!

பெருமழை பெய்திடுவது விபத்து அல்ல—பருவகால நிகழ்ச்சி. அதனைத் தடுத்திடவும் இயலாது—மழை தேவையில்லை என்று கூறிடவும் கூடாது.

இந்த இயற்கை நிகழ்ச்சி 'விபத்தாகி' விடுகிறது, ஏழை எளியோருக்கு. அந்தவிதமான நிலையில் இருக்கிறது அவர்கள் குடிஇருக்க அமைத்துக்கொண்டுள்ள இடங்கள்.

பெரிய பெரிய தலைவர்களின் பெயர்கள் இந்த இடங்களுக்கு — இன்றைய வெள்ளக்காடுகளுக்கு—சேற்றுக் குழிகளுக்கு—பக்தவத்சலனாரின் திருப்பார்வையில் தென்பட்டவைகளுக்கு. காமராஜ் நகர், ராஜாஜி நகர், சத்யமூர்த்தி நகர், அம்பேத்கார் நகர், இப்படி உள்ளன பெயர்கள்! பெருமழை வந்ததும், அந்த இடங்களிலே உள்ள மக்கள், தட்டு முட்டுச் சாமான்களை விட்டுவிட்டு, தத்தி நடப்பவைகளைத் தூக்கிக்கொண்டு, ஓடுகிறார்கள், ஓடுகிறார்கள், ஒதுங்க இடம் தேடிக்கொண்டு.

இது, ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு வெள்ளச் சேதத்தின்போதும், முதலமைச்சர்கள் 'பார்வையிடுகிறார்கள்'—'பரிவு' தெரிவிக்கிறார்கள் — ஆவன செய்யப்படும் என்று அறிவிக்கிறார்கள். அவர்கள் உருகி நிற்கும் காட்சியைப் படமாக்கி இதழ்கள் வெளியிடுகின்றன. மழை நிற்கிறது; கதிரவன் கிளம்புகிறான்; இடிந்ததும் கரைந்ததும் போக மிச்சமாக உள்ள இடத்தில் அந்த ஏழை எளியவர்கள் சென்று குடும்பம் நடத்துகிறார்கள். அரசு திட்டம் தீட்டியபடி இருக்கிறது இந்நாட்டைப் பொன்னாடு ஆக்க!!

ஏன் இத்தகைய நடிப்பு என்றே கேட்கத் தோன்றுகிறது.

பெருமழை வந்திடும்போதெல்லாம் இந்தப் பள்ளங்கள் வெள்ளக்காடுகள் ஆகிவிடும் என்பது பற்றி இனியுமா ஆராய்ச்சி தேவை. ஆண்டாண்டுக்கும் எழும் அழுகுரல் நன்றாகத் தெரிவிக்கிறதே! ஏன் ஒவ்வொரு ஆண்டும், இது ஏதோ துளியும் எதிர்பாராத முறையில், திடுக்கிடத்தக்க விதத்தில் ஏற்பட்டுவிட்ட 'விபத்து' என்பதுபோல ஒரு 'பாவனை'ப் போக்கிலே ஆட்சியாளர்கள் இருந்திடுகிறார்கள்? புரியவில்லை!

குடிசைகளில் குமுறிக்கிடக்கும் இலட்சக்கணக்கானவர்கள், இந்த இடங்களை விரும்பித் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்கள் அல்ல; அவர்களின் வயிற்றுப்பாட்டுக்கு வகைதரும் தொழில் கிடைக்கும் இடத்துக்குப் பக்கமாக இருந்திட வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களை அந்த இடங்களிலே இருந்திடச் செய்கிறது.

இது புரிகிறபோது அவர்களிடம் உள்ளபடி பரிவு கொள்பவர்களானால், இந்தப் பள்ளப் பகுதிகளை, மழை பெய்யாத நாட்களில், திட்டமிட்டு, மேட்டுப் பாங்குள்ளவைகளாகச் செய்து, இயற்கையின் சீற்றம் அவர்களைப் பாழ்படுத்தாத முறையை ஆக்கித்தரவேண்டாமா! செய்தனரா? இல்லையே! பார்க்கிறார்கள்—நேரிலேயே சென்று பார்த்தேன் என்று தெரிவிக்கிறார்கள். அமைச்சர்களின் திருப்பார்வைக்குப் பல 'மகத்துவம்' இருக்கலாம்—ஆனால் அந்தப் பார்வை பட்டதும், பள்ளம் மேடாகிவிடுவதில்லையே!! இந்நிலையில், பார்த்தார் என்று கூறிப் பெருமிதம் கொள்வது பொருளற்றதாகிவிடுகிறதே. பார்த்தார், நிபுணர்களைக் கலந்து பேசினார், பள்ளப் பகுதிகளை மேட்டுப் பாங்கானதாக்கினார், பெருமழையால் அவதி விளையாதபடி செய்துவிட்டார்! என்றால், இருக்கும் இடம் நோக்கி வணக்கம் கூறலாம்; வாழ்த்திடலாம். செய்வதாகத் தெரியவில்லையே! பார்த்தார்! அவ்வளவுதானே!!

தம்மாலே ஆளப்பட்டு வருகிற மக்கள் இந்த நிலையிலே இருப்பதைப் பார்ப்பதிலே—பார்த்துவிட்டு வருவதிலே — அவருக்குத்தான் என்ன பெருமை! தம்மை இந்த நிலையில் வைத்திருக்கும் முதலமைச்சரைப் பார்ப்

பதிலே அந்தப் பரிதாபத்துக்குரியவர்களுக்குத்தான் என்ன மகிழ்ச்சி ஏற்படமுடியும்!

பெருமழை பெய்து வெள்ளம் வந்தால், ஏதேதோ மிதந்து வருகின்றன, அவைகளைக்கண்டு மருண்ட கண்களுக்கு வேண்டுமானால், அமைச்சர்களைக் காணும்போது ஒருவகையான ஆறுதல் கிடைக்கலாம் —ஓ! இது காடு அல்ல, நாடுதான்! ஆள்பவர்கள் அற்ற இடமல்ல!! இதோ அமைச்சர்கள்! என்று எண்ணிடவும் பேசிடவும் ஒரு வாய்ப்பு! வேறென்ன கிடைக்கிறது, வேதனையில் அமிழ்ந்துகிடக்கும் அந்த மக்களுக்கு?

இந்தப் பகுதிகளை, சேரி, குப்பம், என்றெல்லாம் கூறக்கூடாது என்று அறிவுரை வழங்குகிறார்கள் ஆளவந்தார்கள்—காலனிகள் என்று பெயராம்!!

வெள்ளைக்காரன் இந்தியா, பர்மா, சிலோன் இவைகளையெல்லாம் 'காலனிகள்' என்று கூறினான், ஏகாதிபத்யம் நடத்த!

நாங்கள் என்ன, வெள்ளைக்காரனுக்கு மட்டமான வர்களா, நாங்களுந்தான் ஆளுகிறோம், எங்களுக்கு வேண்டாமா, 'காலனிகள்' என்று கருதிப்போலும், இந்த இடங்களுக்கு, காலனிகள் என்று பெயரிடச் சொல்கிறார்கள்.

பெயர் எதுவாகவேனும் இருக்கட்டும், அது மக்கள் வாழத்தக்க இடமாக இருக்கவேண்டாமா? செய்ய இயலாதா? பொருளே கிடைக்காதா! நெஞ்சில் கைவைத்துக் கூறுவார்களா? இருபத்திஇரண்டுஆயிரம் கோடி ரூபாய்களாமே நாலாவது ஐந்தாண்டுத் திட்டத் துக்கு! இதற்குமட்டுந்தானா பணத்தட்டுப்பாடு வந்து விட்டது? ஆண்டு பதினேழு உருண்டோடிவிட்டன, திட்டமிட்டு, ஒரு பெருநகரின் நடுவிலேஉள்ள இந்தப் பள்ளக்காடுகளைச் சீர்படுத்த முடியவில்லை, பேசுகிறார் கள் மெத்த முடுக்குடன், சிந்திரிபார், சித்தரன்ஜன்பார், பிலாய்பார், ரூர்கேலாபார், துர்காபூர்பார், பக்ராபார் என்றெல்லாம்; அவசரத்தாலும் ஆர்வமிகுதியாலும், மகாபலிபுரச்சிற்பங்களைக்கூடக் காட்டுகிறார்கள், தமது சாதனைப் பட்டியலில் சேர்த்துக்கொண்டு.

ஆளவந்த ஐயனே! எம்மைப்பாரும்! நாங்கள் குடியிருக்கும் இடத்தைப் பாரும்! என்று ஏழை குமுறுகிறான்; வெள்ளம் தணிந்து, வெய்யில் கிளம்பியபிறகு; அமைச்சர்கள் வருகிறார்கள்; பார்வையிடுகிறார்கள்!!

பார்த்தாராமே! இன்னும் என்ன?

அடுத்த வெள்ளம் வருகிறவரையில், 'மீண்டும் அவரைப் பார்க்க முடியாது—ஆகவே இப்போதே, பார்த்துக்கொள்ளுங்கள் — கண்குளிரப் பார்த்துக் கொள்ளுங்கள் — மற்றதுக்குப் 'பகவான்' இருக்கிறார் பார்த்துக்கொள்வார்!! — என்றன்றோ கூறவேண்டியிருக்கிறது. சே! என்ன ஆட்சி! என்ன கேவலமான நிலைமை!!

❋

எட்டு கோடி!

காஷ்மீரத்து முதலமைச்சராக இருந்து வந்து இன்று 'கைதி'யாக்கப்பட்டிருக்கும் பக்ஷிகுலாம்முகமது பதவியிலிருந்துகொண்டு பல்வேறு தவறான வழிகளில் சேர்த்து வைத்துக்கொண்டுள்ள சொத்தின் மதிப்பு கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் இருக்குமாம். கூறுகிறார் கள்! இப்போது!!

பக்ஷிகுலாம்முகமது, இவ்விதமாகக் கொள்ளை அடித்துக்கொள்ளக்கூடியவர் என்ற எண்ணமே எவருக்கும் எழக்கூடிய இடத்திலேயோ, நிலையிலேயோ அவர் இருந்ததில்லை; எப்போதும், காங்கிரசின் பெருந் தலைவர்களின் கொலுவிலே இடம்பெற்று, அந்தப் புகழொளியிலே பங்குபெற்று, நாட்டுப்பற்றினை அது அற்றவர்களுக்கு ஊட்டிடும் வித்தகர் என்ற நிலையிலே இருந்து வந்தார்—திடீரென்று ஓரிரவு அவரைப் போலீஸ் இழுத்துச் சென்று சிறையிலே போடும் கட்டம் பிறக்கும் வரையில்.

பேதம் பேசி, பிளவு மூட்டி, அயல் நாட்டுக்கு அடிமையாகி பயங்கரமான புரட்சி நடத்தத் திட்டமிட்டார் என்று எந்த ஷேக்அப்துல்லா மீது வழக்குத் தொடுத்தார்களோ, அதே அப்துல்லாவை அடக்கிய ஆற்றல் மிக்கவர், இந்தியாவிடம் இதயத்தை இணைத்துக்கொண்டவர், எள்ளளவும் தன்னலம்கொள்ளாதவர்; தனிப்பெருந் தலைவர், அமைதியையும் வளர்ச்சியையும் காஷ்மீரத்துக்குப் பெற்றளித்தவர், அவருடைய குரலே காஷ்மீரத்துக்குரல் என்று இதே காங்கிரஸ் அரசினர் பக்ஷியைப் போற்றி வந்தனர். கோலாகலமான வரவேற்புகள்! 'மந்திராலோசனை' மண்டபங்களிலே மதிப்பான இடம்!! எல்லாம் கிடைத்தது — எட்டு கோடி ரூபாய் தட்டிக்கொண்டுவிட்டார் என்று எந்த பக்ஷி குலாம்முகமதுமீது குற்றம் சுமத்தப்படுகிறதோ, அவருக்கு!!

ஷேக்அப்துல்லா இல்லையென்றால் காஷ்மீரம் கொந் தளிக்கும் என்று மிரட்டினார்களே, பார்த்தீர்களா, பக்ஷியின் ஆட்சியை! எத்தனை அமைதி! என்னென்ன வளர்ச்சி!! என்றெல்லாம் பாரதப் பிரதமரிலிருந்து பல்வேறு மட்டங்களிலே உள்ள தலைவர்கள் வரையில் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தனர்.

அடைபட்டுக்கிடக்கும் அப்துல்லாவைவிட ஆயிரம் மடங்கு செல்வாக்குப் படைத்தவர்; அப்பழுக் கற்றவர்! ஆற்றல்மிக்கோன் என்று அர்ச்சித்தனர். இப்போது தெரிவிக்கிறார்கள், அந்த ஆற்றல்மிக்கோன் ஆட்சிப் பொறுப்பில் இருந்துகொண்டு அடித்த கொள்ளை எட்டு கோடி ரூபாய் அளவு என்று.

எட்டுக் கோடி ரூபாய் அளவுக்குப் பொதுப்பணத் தைச் சூறையாடினார் பக்ஷிமுகமது என்பது உண்மையாக இருக்குமானால், இவ்வளவு பெரிய அளவு

பணத்தை அவர், திடீரென ஒரு நள்ளிரவில், 'சர்க்கார் கஜானா'விலிருந்து எடுத்துக்கொண்டு போயிருந்திருக்க முடியாதே; பல்வேறு சமயங்களில், பலவிதமான முறைகளில் பணத்தைத் தனதாக்கிக்கொண்டிருக்க வேண்டுமே—குறைந்தது ஒரு ஏழாண்டுத் திட்டமாவது செயல்படுத்தப்பட்டிருக்குமே — அப்போதெல்லாம், இன்று குற்றம் சாட்டுபவர்களுக்குத் துளிகூட 'வாடை' அடிக்கவே இல்லையா! வாடை அடித்தது என்றாலும், பக்ஷி குலாம்முகமது பூசிக்கொண்டிருந்த 'தேசிய அத்தர்' அதனை மாற்றிக் காட்டிவிட்டதா என்று கேட்கத் தோன்றுகிறது. கேட்டு? யார் பதில் கூறப்போகிறார்கள்!! முன்பு புகழ்ந்தீர்களே, இப்போது இகழ்கிறீர்களே! விந்தையாக இருக்கிறதே! நம்பச் சொல்கிறீர்களா, நிச்சயமாகவே; என்றெல்லாம் கேட்கத் தோன்றும் எவருக்கும். கேட்கிறார்கள், பக்ஷியின் ஆதரவாளர்கள், இப்போதுகூட!!

ஒருபுரத்திலே, எட்டு கோடி ரூபாய் அளவு கொள்ளை நடந்திருப்பதற்கான ஆதாரங்கள் திரட்டப்பட்டு, வழக்கு தொடுப்பதற்கான வேலை நடந்துகொண்டிருக்கிறது; மற்றோர் புரத்திலோ, பக்ஷிகுலாம் முகமது குற்றமற்றவர், சாதிக்கட்சியினர் தமது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள நடத்தும் சதி நாடகம் இது, ஆகவே பக்ஷியை விடுதலை செய்திடுக என்று சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், லால்பகதூரிடம் பேசிக்கொண்டிருக்கும் விந்தையும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதனைக் கேள்விப்படும்போது, பொதுமக்களின் தலை சுற்றும்; அவ்வளவு திகைப்பூட்டும் திருப்பங்கள், திடீர் மாற்றங்கள் நிரம்பியதாக இருக்கிறது பக்ஷி குறித்துக் கிளப்பிவிட்டுள்ள பிரச்சினை.

ஷேக்அப்துல்லாவை, பக்ஷி எந்தச் சிறையில் அடைத்துவிட்டு வந்து, காங்கிரஸ் அரசிடம் கூறி, பாராட்டுதலைப் பெற்றாரோ, அதே சிறையில் பக்ஷி!

பக்ஷியைச் சிறையில் அடைத்துவிட்டு இன்றைய காஷ்மீர் முதலமைச்சர் சாதிக், டில்லி செல்கிறார்; நிலைமை கட்டுக்கடங்கி இருக்கிறது; வழக்கு தயாராகிறது என்கிறார்; டில்லி, இவரன்றோ காஷ்மீரத்தின் ஒப்பற்ற தலைவர் என்று பாராட்டுகிறது.

மிகப் பயங்கரமான வழக்கு; ஆதாரங்கள் மலைமலையாக; சான்றுகள் மறுக்கவொண்ணாதன, ஆயுள் தண்டனை தரத்தக்க குற்றம், மெய்ப்பிக்கப்பட்டுவிடும். உலகு அதிர்ச்சி அடையத்தக்க உண்மைகள் வெளியாகும், என்று கூறிவந்தனர் காங்கிரசின் பெருந்தலைவர்கள், ஷேக்அப்துல்லாமீது வழக்கு நடத்திக்கொண்டு வந்தபோது.

ஆண்டுபலவும் இலட்சங்கள் பலப்பலவும் உருண்டோடியான பிறகு, காரணம் காட்டாது, ஷேக்அப்துல்லாவை விடுதலை செய்தனர்; வழக்கையும் திரும்பப் பெற்றுக்கொண்டனர்; ஆரத்தமுவி வரவேற்றனர் அப்துல்லாவை!!

இந்த விந்தையைக் கண்டவர்கள், இப்போது பக்ஷிகுலாம் முகமதுமீது வழக்கு தொடரப்படும் என்று அறிவிக்கிறபோது, கண்சிமிட்டிக் காட்டுகின்றனர், கேலியாக!

ஒன்று தெரிகிறது தெளிவாக—காங்கிரசின் பெருந்தலைவர்களுக்கு 'வேண்டியவராக' இருந்துகொண்டு, எத்தனை கொள்ளை அடித்தாலும், வெளிவருவதுஇல்லை! ஏதோஓர் காரணத்துக்காகக் காங்கிரஸ் பெருந்தலைவர்களிடம் மோதிக்கொண்டால், பழய குப்பைகள் கிளறப்பட்டு, பயங்கர வழக்குகள் பூட்டப்படுகின்றன.

பக்ஷிகுலாம்முகமது எட்டுகோடி ரூபாய் அளவு பொதுப்பணத்தைத் தனதாக்கிக்கொண்டார் என்றால், அது, காங்கிரஸ் பெருந்தலைவர்களின் நம்பிக்கைக்கு உரியவராக அவர் இருந்த நாட்களிலே நடைபெற்ற பெருங்குற்றம். அதனை இவர்கள் ஏன் தக்க நேரத்தில் அறிந்து கொள்ளவில்லை? இயலவில்லையா? விருப்பமில்லையா? மக்கள் இதனைக் கேட்கிறார்கள்.

பொதுவாகக் காங்கிரசின் நேரடியான ஆட்சியிலும், ஆதரவு பெற்ற ஆட்சியிலும், கோடி கோடியாகப் பொதுப் பணம் சூறையாடப்பட்டு, 'தனிப் பெருந் தலைவர்கள்' கொழுத்து வருகிறார்கள் என்பது, கெய்ரான் குறித்த விசாரணையின்போது விளக்கப்பட்டுவிட்டிருக்கிறது. இனி பக்ஷி குலாம் முகமது மீது வழக்கு நடைபெறும்போது, என்னென்ன வெளிப்படுமோ, யார் கண்டார்கள்!

பக்ஷி குலாம் முகமது, எப்படிப்பட்டவர் என்று நூறு நாட்களுக்கு முன்பு வரையில், இவர்கள் கூறிக்கொண்டு வந்தனர் என்பது எல்லோருடைய நினைவிலுமிருக்கும். பக்ஷி குலாம் முகமது, நாட்டுப் பணிக்காக பதவியையே விட்டு விட்ட பெருந்தலைவர் என்றார்கள் —காமராஜர் திட்டத்தின்படி முதலமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு, 'துண்டை உதறித் தோளிலே போட்டுக்கொண்டு' தொண்டு செய்யக் கிளம்பிவிட்டார் என்றார்கள்.

காமராஜர் திட்டத்தைப் பாராட்டி பக்ஷியே கூடத்தான் பேசினார். பேசினாரா? அந்தத் திட்டத்தின் அருமையினை அறிந்து கொள்ளாதவர்களைச் சாடினார்!

அவர்தான் இன்று சிறையில்! அவர் தான் எட்டுக் கோடி ரூபாய்களைத் தனதாக்கிக் கொண்டவர் என்று இன்று அறிவிக்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சியின் விளைவாக இன்னும் என்னென்ன காணவேண்டி வருகிறதோ, என்னென்ன கேட்கவேண்டி வருகிறதோ, எத்தனை கெய்ரான்களோ, என்னென்ன வகையான பக்ஷிகளோ, யார் கண்டார்கள்!

அழுகிய பண்டத்தில், என்னென்ன நெளியும் என்று யார் கண்டார்கள்!!

297
19/ 29-11-64

அந்திக் கலம்பகம்

"பொன்னி! அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்திருக்கிறயா..... பட்டு சொன்ஞளே இங்கே வந்த உடன்..."

"கடிதமா? எந்தக் கடிதத்தைப் பற்றி பட்டு சொன்ஞள்? ஓ' கல்கத்தாவிலிருந்து வந்த கடிதத்தைப் பற்றியா..."

"ஆமாம்! டாக்டரிடமிருந்து வந்த தாமே. ஏதோ அந்த மட்டும நல்ல வள்தான் டாக்டர். நம்ம கவனமும் சிறிதளவு இருக்கிறது என்பதைக் காட்டிக்கொண்டாளே."

"ஏமு! கடிதம் வந்தது என்றதும் என்ன அதிலே எழுதப்பட்டிருக்குது எப்போது வருவதாக டாக்டர் எழுதியிருக்கிரு என்பதுபற்றிக் கேட்பார்களா, வக்கணை பேசுவார்களா..."

"பல விஷயங்களை எழுதியிருக்கிரு நம்ம டாகடர்! ஆஞ ஊாதிருமபுகிறதுபற்றி ஒரு வார்த்தைகூட இல்லை..."

"அவளுக்குக் கல்கத்தா அவ்வளவு பிடித்துவிட்டதுன்னு தெரியறது."

"அப்படியும் சொல்வதறகில்லையே....கல்கத்தாவிலே ஏகப்பட்ட இட நெருக்கடியாம்...உணவுக்குக் கஷ்டந்தாஞம்..."

"காசிக்குப் போஞலும் கர்மம் தொலையவில்லை என்பதுபோல இருக்குதே பொன்னி! இவ்வளவு கஷ்டத்தையும் பொறுத்துக் கொண்டு ஏன் அங்க இருககவேண்டும், சொல்லு..."

"பொன்னியைக் கேட்டா? கேட்க வேண்டியது டாக்டரை!."

"ஏமு! கல்கத்தாவிலே இரு து சங்கு வளையல்கள் வாங்கி அனுப்புவதாக எழுதியிருக்கிரு, டாக்டர்..."

"அதென்ன பொன்னி, சங்கு வளையல்கள் அங்கே விசேஷமா?"

"ஆமாம்! அழகாகக்கூட இருக்குமாம. எனக்குக்கூடக் கேளவிதான்..."

"கல்கத்தாவிலே சங்கு வளையல்கள் அழகாக இருககும எனபது மட்டுந்தானே நீ கேள்விப்பட்டது, ஏமு! அந்த வளையல்களுக்குத தேவையான 'சங்கு' அவர்களுககு எங்கே இருந்து கிடைக்கிறது என பது தொியுமோ. நம்ம தமிழ் நாட்டிலே இருந்துதான்..."

"இது என்னடி கேலிக்கூத்து! நம்ம நாட்டு சஙகுகளை வங்காளத துக்கு அனுப்பி, அங்கே அவர்கள அதை வளையல்களாகச் செய்து நமக்கே அனுப்புகிருர்களா..."

"ஆமாம், நம்முடைய அறிவுக் கூர்மை அப்படி! நம்ம நாட்டுத் தவிடு, நிலக்கடலைப் பிண்ணுக்கு இதெல்லாம் வெளிநாடுகளுக்குப் போய், நம்ம நாட்டுக்கே, பிஸ்கட்டாகவும், சாக்லட்டாகவும் திரும்பி வருவதுபோலத்தான் இதுவும்..."

"அதனுலே நமக்குத்தானே வீணுன நஷ்டம்?"

"அதென்ன அவ்வளவு குறுகிய நோக்கம் உனக்கு என்று கேட்டு விடுவா, எழு! தேசியம் அதிகமாகி விட்டவர்களெல்லாம்."

"போடி, போ! தாயும் மகளும் ஒன்று என்ருலும் வாயும் வயிறும் வேறு வேறு என்பார்கள். நம்ம நாடு, அதனுடைய வளர்ச்சி, அந்த மக்களுடைய நலன் இதிலே நாம் அக்கறை காட்டுவது எப்படித் தவருக முடியும்..."

"தவரு தவறு இல்லையோ; எனக்குத் தெரியாது. ஆனுல் அப்படிப் பேசுவது தேசியம் அல்ல என்று பலர் சொல்லுவது எனக்குத் தெரியும்..."

"எனக்குத் தெரியும் பொன்னி! ஒரு பத்து நாளைக்கு முன்புகூட, தேசியம் என்பதைக் குறுகிய நோக்கத்துக்குப் பயன்படுத்தக்கூடாது என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசியிருப்பது..."

"பலே! பலே! பொன்னி! இன்னும் ஒரு பத்து நாளிலே நம்ம ஏழு, உன்னையே தோற்கடித்து விடுவா போல இருக்குதே..."

"இந்தவிதமான தோல்வி, பட்டு! எனக்கு மகிழ்ச்சியும் பெருமையும் தான் கொடுக்கும்."

"சரி! சங்கு வளையல்கள் போல இன்னும் என்னென்ன கல்கத்தாவிலே அருமையாக இருக்கிறதாம், பொன்னி!..."

"ஏன்! உனக்கு எந்தப் பொருளின்பேரிலே இப்ப ஆசை பிறந்து விட்டிருக்குது."

"ஏழு! எனக்கு முத்துமாலை என்ரு கொள்ளை ஆசை..."

"அதுக்கு நாங்க என்னடி செய்யலாம் பட்டு! அவன் வந்தாத்தானே ......!!"

"போ ஏழு! இதுபோலக் கேலி பேசிப் பேசி எனக்கு எரிச்சலை உண்டாக்கிவைப்பதிலே உனக்கு என்ன அவ்வளவு மகிழ்ச்சி நான் வெண்முத்து பேரிலே ஆசை என்று சொன்னு..."

"பட்டு! இப்ப ஜெர்மனி நாட்டிலே நம்ம நாட்டு வெண்முத்துக்களுக்கு ஏகப்பட்ட கிராக்கியாம்."

"நம்முடைய நாட்டு முத்து அவ்வளவு தரமானது இல்லையா பொன்னி!"

"ஆமாம்! இப்ப மட்டுமா! பழைய நாளிலேயே. சொல்வார்களே பள்ளிக்கூடத்திலே, ஈஜிப்ட் நாட்டு அரசி கிளியோபாட்ரா தமிழ் நாட்டு முத்துக்களை திராட்சை ரசத்திலே போட்டுச் சாப்பிடுவாளாமே..."

"முத்து மாலை போட்டுக் கொள்வது சரி...அழகுக்காக. முத்துக்களைச் சாப்பிடுவதா..."

"ஆமாம்! ஏன் இரும்பு, தங்கம், இவைகளை பொடியாக்கிச் சாப்பிடுவது, மருத்துவ முறையிலே ஒன்றல்லவா..."

"ஓ! நீ இந்தத் தங்க பஸ்பத்தைச் சொல்றயா..."

"ஆமாம்! பஸ்பம் என்பதைத் தான் பொடி என்று சொன்னேன்."

"முத்து குளித்தெடுப்பது தமிழ் நாட்டிலே இருக்கிறதல்லவா..."

"சரியான, தரமான முறையிலே அதைத் திட்டம் போட்டுச் செய்யவில்லை ஏழு! என்னமோ கிடைப்பதை எடுக்கிறது என்ற அளவிலே தான் இருக்குது..."

"எந்தத் தொழிலையும் புதிய புதிய முறையிலே நடத்த, வெளிநாடுகளிலே உள்ளவர்களுக்குத்தான் நிறையத் தெரியுது..."

"ஏன்! புதிய புதிய முறைகளைச் சொல்லிக் கொடுக்க நம்மநாட்டிலே நிபுணர்கள் இல்லையா, விஞ்ஞானிகள் இல்லையா! எவ்வளவோ பேர் இருக்கிரு. பயன்படுத்திக் கொண்டால்தானே..."

"நம்ம நாட்டிலேயிருந்து அமெரிக்காவுக்கோ இங்கிலாந்துக்கோ, மேல் படிப்புப் படிக்கப்போகிற விஞ்ஞானிகள், அங்கேயே தங்கிவிடுகிரு ஏழு! அது ஒரு பெரிய தடங்கல், நம்ம நாட்டுத் தொழில் முனனேற்றத்துக்கு."

"பட்டு சொல்வது உண்மைதான் ஆனு, ஏன் வெளிநாடுகளிலேயே தங்கிவிடுகிருர்கள் விஞ்ஞானிகள்? இந்த நாட்டிலே அவர்களை மதிப்பாக நடத்துவதில்லை, போதுமான சம்பளம் தருவதில்லை, தேவையான ஆராய்ச்சிக்கூடம் வைத்துக் கொடுப்பதில்லை..."

நாட்டுக்கே அதனுலே பெரிய நஷ்டம். தாங்கள் படித்த படிப்பும், ஆராய்ச்சித் திறமையும் சரியான படி மதிக்கப்பட்டாத்தானே, பயன்படுத்திக்கொள்ளப் பட்டால்தானே அவர்களுக்கு மனதுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படும்..."

"சரியான பேச்சு ஏழு! நீ சொல்வது வெளிநாடுகளிலே புதிது புதிதாக முறைகளைக் கண்டுபிடித்தபடி இருக்கிறதாக இதழ்களிலே பார்க்கிருேம். வியப்பாக இருக்குது. வீடுகட்ட செலவு அதிகமாகுதல்லவா? அதற்காக இப்போது கடற்பஞ்சு இருக்குது பார், அதைப் பக்குவப்படுத்தி, பலகைகள்போல மாற்றி அதைக்கொண்டு வீடு கட்டுகிற முறை இருக்குதாம், ஐரோப்பாவிலே..."

"ஜப்பானிலே காகித அட்டை, மூங்கில் இவைகளைக்கொண்டே வீடுகள் கட்டிவிடுகிருர்களாமே."

"ஆமாம், பெரிய பெரிய கட்டடங்களும் இருக்கின்றன; என்ருலும் நீ சொல்கிற விதமான வீடுகளும் கட்டியிருக்கிருர்கள். காரணம் என்ன தெரியுமோ. ஜப்பானிலே அடிக்கடி பூகம்பம் ஏற்படும்—வீடுகள் இடிந்து விழுந்து அழிந்து போகும் — ஏராளமான பொருள் பாழாகும். அதனுலே வீடுகள் விழுந்துவிட்டால்கூட, அதிகச் செலவில்லாமல்; மறுபடியும் புதிசா வீடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டுமல்லவா......அதனுலே மலிவாக, மூங்கில், காகித அட்டை இவைகளைக்கொண்டே கட்டுகிருர்களாம் ......"

"சென்னையிலே பொன்னி! ஒவ்வொரு வருஷமும், கார்த்திகை — மார்கழி மாதத்திலே, மழை பெய்து வெள்ளம் புகுந்து, ஏழை எளியவர்களுடைய குடிசைகளை நாசமாக்கிவிடுது. இந்த அழிவைத் தடுக்க ஒரு திட்டம் போடக்கூடாதா இங்கே உள்ளவர்கள். இத்தனைக்கும் ஆளுகிற கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் ஓயாமல் போய்ப்போய் வருகிருர்கள் வெளிநாடுகளுக்கு."

"வெள்ள நிவாரணத்துக்கு மட்டும் பணம் செலவழித்துக் கொண்டு வருகிரு, சர்க்காரிலே..."

"சர்க்காரிலே மட்டுமா! வெள்ளம், அதனாலே ஏழைகள் வீடு இழந்தார்கள், தவிக்கிருர்கள் என்று கேள்விப்பட்ட உடனே எம். ஜி. ராமச்சந்திரன் 15000 ரூபாய் நன்கொடை கொடுத்தார்; சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன் இவர்களும் நன்கொடை கொடுத்தார்கள்; வெள்ள நிவாரண நிதிக்கு..."

"நினைத்ததும் சிரிப்புத்தான் வருது ஏமு! ம. பொ. சிவஞானம் இருக்கிருரே, அவர்தான் சொன்னர், வெள்ள நிவாரணம் என்று இதற்குப் பெயர் வைப்பது சரிஇல்லே. வெள்ளம் என்ருல், சமமான இடத்திலே, எப்போதோ ஒருமுறை பெரியமழை அல்லது எங்காவது உடைப்பு இதன் காரணமாக, தண்ணீர் புரண்டுவந்தால், வெள்ளம் என்று சொல்லலாம்; நிவாரணமும் செய்யலாம், ஆனல் இது வெள்ளம் அல்ல. ஏழை எளியவர்கள் வேறு வழியில்லாமல், பள்ளங்களிலே குடிசை போட்டுக் கொள்கிருர்கள்; ஒரு பெருமழை பெய்தால், பள்ளத்தை நோக்கித் தண்ணீர் ஓடுகிறது. ஆகையாலே, இதை வெள்ள நிவாரண நிதி என்று சொல்வதற்குப் பதிலாகப் பள்ள நிவாரண நிதி என்று சொல்லலாம். ஆண்டாண்டுக்கு, பணத்தைக் கொட்டிக் கொண்டிருப்பதைவிட, திட்டமிட்டுப் பணம் செலவிட்டு, பள்ளத்தை மேடுஆக்கி விட்டால், ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் அழிவைத் தடுத்திடலாம் என்று பேசியிருக்கிருர்..."

"நல்ல யோசனைதான்; ஆனல் சர்க்கார் அதைக் கேட்டு அதன்படி நடந்துகொள்ள வேண்டுமே; நடந்து கொள்வார்களா?"

'இவர்கள் அதன்படி நடந்து கொள்ளாவிட்டால், அப்படி திட்டமிட்டு ஏழைகளின் தொல்லையைத் தீர்க்கக் கூடியவர்களை, மக்கள் ஆளச் சொல்லி அழைக்க வேண்டியதுதான். செய்யமாட்டார்களா என்ன? அதுதானே ஜனநாயகம் ......"

"ஜனநாயகம் பணநாயகமாகி விட்டிருக்கிறதே ஏமு! என்ன செய்வது?"

"உங்க கட்சிகூட, என்னமோ உண்டி வசூல் செய்யப் போகுதாமே ......"

"ஆமாம் ஏமு! உண்டி வசூல் செய்யாமல் என்ன செய்யும் கழகம்! பிர்லா சிராஜுதீன் இவர்களிடமா இலஞ்சக் காசு கேட்கும். மக்களிடம்தான் கேட்டுவாங்கும்..."

"தப்பாக எடுத்துக் கொள்ளாதே பொன்னி! நான் கேலிக்காக அவ்விதம் சொல்லவில்லே. உள்ளபடி ஒரு கட்சியை அப்படித்தான் நடத்திக்கொண்டுபோகவேண்டும். எங்களவர்கூட ஒருநாள் அதைப்பற்றி பாராட்டிப் பேசினர்..."

"பாராட்டியது போதாது ஏமு! பொன்னி, உண்டி வசூலுக்காக வருகிறபோது, உங்களவர் நிறையப் பணம் தரவேண்டும்; சொல்லி வை; தெரியுதா..."

'கட்டாயம் தருவார் பட்டு! எனக்குத் தெரியும். முதலிலே, எங்களவர் கழகம் என்றுகூடச் சொல்லமாட்டார், கலகம் என்றுதான் கேலி செய்வார். கழகத்திலே உள்ளவர்கள் காலித்தனம் செய்பவர்கள் என்று பேசுவார்...''

"முன்பு! இப்போது கழகத்தைப் பற்றி என்ன சொல்லுகிருர் ஏமு!''

"நாலு பேர் சேர்ந்ததும், அங்கங்கே நட்டுப் பொட்டிட்டுக் கொள்கிருடி ஏமு! உன்னுடை கழகம் இருக்குதே அது அப்படி இல்லே. பொறுப்பாக இருந்து வளர்ந்துகொண்டிருக்குது என்று சொல்கிருர்..."

"ஆமாம் ஏமு! நீ பேசுகிறபோது, கழகத்தை என்னுடைய கழகம் என்று சொல்லி, உனக்கு அதிலே ஒருவிதமான தொடர்பும் இல்லாத மாதிரி பேசுகிறே, உங்களவர் கழகத்தைப் பற்றிப் பேசும்போது, உன்னுடை கழகம் என்று பேசி உனக்கும் கழகத்துக்கும் தொடர்பு இருப்பதாகச் சொல்கிருர் என்று நீயே சொல்கிருயே, இது என்ன வேடிக்கை..."

"அட, அதைச் சொல்கிறயா! நான் சும்மா உன் வாயைக் கிளறி விடுவதற்காகத்தான், கழகம் என்ரு பொன்னியுடையது என்று வேடிக்கை செய்வது......எங்களவரிடம் பேசும்போது, நான் கழகம் என்றுதான் சொல்வது வழக்கம்... ஏன்! உனக்கு இன்னமும் சந்தேகமா, நான் கழகமா இல்லேயா என்று..."

"செச்சே! அப்படிச் சந்தேகம் இருந்தா, நான் இவ்வளவு தாராளமாக உன்னிடம் கழகத்தைப் பற்றிப் பேசுவேனு...எனக்குத் தெரியுமே உனக்குக் கழகத்திடம் மெள்ள மெள்ள அக்கறை உண்டாகி வருவது..."

"பொன்னி வலே வீசுகிரு ஏமு! மயங்கினே, உன்னேக்கொண்டு போய் இந்தி எதிர்ப்பிலேகூட மாட்டி விட்டுவிடுவா......"

"அதுதான் இல்லே என்கிறேன் பட்டு! இந்தி எதிர்ப்பிலே யாரும் யாரையும் மாட்டிவிட்டுவிடுவது கிடையாது. அதிலே ஈடுபட்டவர்கள் அவ்வளவுபேரும் தாமாக அதிலே ஈடுபட்டவர்கள்..."

"வேடிக்கை பேசினேன் பொன்னி! எனக்குத் தெரியாதா என்ன? போனவாரம், என்னுடை சினியர் காஞ்சிபுரம் போயிருந்தாராம், அங்கே ஒரு பாராட்டுக் கூட்டம் நடந்ததாம், அதைப்பற்றி மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருந்தார்......"

"என்னத்தைக்கண்டு அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டதாம் பட்டு! கேட்டயோ......"

"ஓ! இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டு, அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவை எரித்துச் சிறை சென்ற ஒருவர்—பெயர் சம்பந்தமாம்—ஒரு சிறிய அச்சகம் நடத்துகிருராம்-சிறையில் இருக்கும்போது, இரண்டு பிள்ளேகள்—எட்டுவயது—ஆறு வயதுள்ள பிள்ளேகள் இறந்துவிட்டார்களாம் — அந்தப் பெரிய இழப்பையும் தாங்கிக்கொண்டு சிறையிலே இருந்துவந்தாராம்..."

(13-ம் பக்கம் பார்க்க)

கைதி எண். 6342

தம்பி!

சிலர், உயர்நிலை செல்வதற்காக, ஆட்சியாளர்களுக்கு இனியவர்களாக நடந்துகொள்கிறார்கள் — நம்மிடம் தனியாகப் பேசும்போது மெத்த உருக்கம் காட்டக்கூடச் செய்கிறார்கள். நாமே ஏமாந்துவிடுகிறோம், இவர்கள் மேல்நிலை வருகிறவரையில் இப்படித்தான் இலை மறை காயாக இருப்பார்கள்—இருக்க வேண்டும் — இவர்களின் நிலைமை வலுவாகிவிட்ட பிறகு, இவர்கள் முழுக்க முழுக்க, நம்மவர் என்று தம்மை விளக்கிக் காட்டுவார்கள் என்று எண்ணிவிடுகிறோம். ஆனால், ‘மேல்நிலை’ அடைந்ததும்; கிடைத்ததை உறுதிப்படுத்திக் கொள்ளவும் ஊறு நேரிடாமற் பார்த்துக்கொள்ளவும், இவர்கள் ‘நம்மவர்’ என்பது துளியும் வெளியே தெரியாதபடி, தம்மை ஆக்கிக்கொண்டு விடுகிறார்கள் என்பது பற்றிப் பேசி, அதற்கான சில எடுத்துக் காட்டுகளும் கூறினேன். நண்பர் அன்பழகன் இந்த என் கருத்தை வலியுறுத்தத் தக்க வேறு சில எடுத்துக் காட்டுகளைத் தந்தார்.

இத்தகைய இக்கட்டுகளை, மேல்நிலையினர் மூட்டி விட்டாலும், மக்கள். நமது கழகத்தை மேலும் மேலும் ஆதரித்து வருகிறார்கள் என்பதை, நடைபெற்ற நகராட்சி—மாநகராட்சி மன்றத் தேர்தல்கள் எடுத்துக் காட்டிவிட்டன என்பது எங்களுக்கு பெருத்த உற்சாகமளித்தது. வெளியே நடைபெறும் வெற்றி விழாக் கூட்டங்களிலே, நாங்கள் கலந்துகொள்ளும் நிலை இல்லை என்றாலும், இங்கு இருந்தபடியே, அந்த விழாக் கோலத்தை எண்ணி எண்ணி மகிழ்ச்சி பெறுகிறோம்.

இன்று, ஐரோப்பாவிலே நிலைபெற்றுவிட்ட கிருத்துவமார்க்கத்தில்; பிரிவும் பிளவும் ஏற்பட்ட சூழ்நிலையை விளக்கும் ஒரு வரலாற்றுத் தொடர்புடைய கதையைப் படித்தேன்.

போப்பாண்டவரின் ஆளுகை ஒருபுறம்—சிற்றரசர்களின் கோலாகலம் மற்றோர்புறம் — சீமான்களின் கொட்டம் பிறிதோர் பக்கம்—இவைகளுக் கிடையிலே துரத்தப்பட்டும் இழுக்கப்பட்டும், ஏழை மக்கள்-இருந்த நிலைமையை விளக்கும் ஏடு.

மார்க்கம், தூய்மையையும் வாய்மையையும் பாதுகாத்திட மலருகிறது — அதிலே களங்கம் ஏற்பட்டுவிட்டது அதனைக் களைந்திட வேண்டும் என்று, எதிர்ப்பு இயக்கம் எழுகிறது—அந்த எதிர்ப்பு இயக்கம் வெற்றி கண்ட பிறகு, புதிய அக்ரமங்கள், புதிய அநீதிகள் முளைவிடுகின்றன;

இந்த நிலைமை பற்றியும், அந்த ஏடு தெளிவான விளக்கம் தருகிறது.

‘சாமான்யர்களும்’ முறைப்படியும் நம்பிக்கையுடனும், தன்னலமற்றும் எழுச்சியுடனும் பணியாற்றினால், அக்ரமத்தை எதிர்த்தொழிக்க முடியும் என்ற உண்மையை இந்த ஏடு கோடிட்டுக் காட்டுகிறது.

முற்றிலும் வேறான காலம் இது; நமது முறைகளும் வேறு என்றாலும், நமது கழகத்தின் பணியும் ஒருவிதத்தில், ‘சாமான்யர்களின்’ முயற்சிதானே. எனவே, அதிலே ஈடுபட்டுள்ள என்போன்றாருக்கு, பல்வேறு காலங்களிலும் இடங்களிலும், அக்ரமத்தை எதிர்த்து நிற்க சாமான்யர்கள் மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றிப் படித்தறியும்போது, புதிய தெம்பு பிறக்கத்தான் செய்கிறது. நாம் மேற்கொண்டுள்ளபணி, அக்ரமத்தை எதிர்த்து நடத்தப்படும் ‘புனிதப் போர்’ எனும் பெருங் காப்பியத்திலே ஒரு பகுதியே தவிர முற்றிலும் புதிதானதல்ல என்ற ஒரு பூரிப்பான எண்ணம் இன்று எனக்கு பூங்காற்றாகித் துணை புரிந்தது.

19—3—64

காஞ்சிபுரத்தில் வெற்றி, ஆரணியில் வெற்றி என்ற செந்தேன் இன்று, கிடைத்தது. ஆரணித் தோழர்கள், நான் மருத்துவ மனையிலே இருந்தபோது என்னை வந்து பார்த்தனர்; வெற்றி நிச்சயம் என்றும் கூறினர். என்றாலும்: ‘பெரிய புள்ளிகள்’ வேலை செய்து, நிலைமைகளைத் தலைகீழாக மாற்றிவிட முடியுமல்லவா— ஆகவே, என்ன ஆகிறதோ என்ற கவலை, மனதைப் பிய்த்தபடிதான் இருந்தது. ஆரணியில் வெற்றி கிடைத்தது என்ற செய்தியை இதழில் படித்த பிறகு மகிழ்ச்சி உறுதியாயிற்று. காஞ்சிபுரத்தைப்பற்றியும் ஐயம் கொள்ளவேண்டிய நிலை இல்லை என்றாலும், காங்கிரஸ்காரர்கள் பொதுத்தேர்தலில் கையாண்ட முறைகளைக் கொண்டு, ஏதாவது செய்துவிடுவார்களோ என்ற

அச்சம் ஒருபக்கம் இருந்துகொண்டிருந்தது. இசுழில் வெற்றிச்செய்தி கண்டபிறகு, புதிய உற்சாகம் பிறந்தது.

நான் 'பரோலில்' காஞ்சிபுரத்தில் இருநதபோது நமது கழகத்தோழர்கள் என்னிடம் இம்முறை கழகம் மிகப்பெரிய வெற்றிபெறும் என்று எழுச்சியுடன் கூறினார்கள். இப்போது நமது கழகத்தவர் நால்வர் உறுப்பினராக இருக்கிறார்கள் — அதிகம் வேண்டாம், இந்த முறை எட்டு கழகத்தவர் உறுப்பினரானாலே போதும், அதுவே பெரிய வெற்றிதான் என்று நான் சொன்னேன். நண்பர் சபாபதி, "எட்டா? அதற்குமேல் வெற்றி கிடைத்தால் என்ன தருகிறீர்கள்?" என்று 'பந்தயம்' பேசினார். "நூறு ரூபாய் விலையில் ஒரு கைக்கடிகாரம் தருகிறேன்" என்று கூறினேன். நூறு ரூபாய்ச் செலவு வந்துவிட்டது!!

இதனை இங்கே நண்பர்களிடம் சொன்னபோது, 'வாங்கித் தரவேண்டியதுதான்!' என்று கூறினார்கள். செலவு, எனக்கல்லவா, இவர்களுக்கு என்ன, வெகு தாராளமாகச் சொல்லிவிட்டார்கள்.

காஞ்சிபுரத்தில் வெற்றிக்காகப் பாடுபட்ட நமது தோழர்கள் அனைவருக்கும், நான் நன்றிகூறிக் கொள்கிறேன்.

அமைச்சர் பக்தவத்சலம், தம்முடைய ஆதீனத்தில் உள்ள ஊர்களிலே ஒன்று என்று காஞ்சிபுரத்தைக் கருதிக்கொண்டிருக்கிறார். அங்கு நகராட்சிமன்றம் கழகத்திடம் வந்திருப்பது, தனி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதல் ஐயமில்லை.

வெற்றிச் செய்திகளால் ஏற்பட்ட உற்சாகத்தில், என் கரத்திலே 'தக்ளி' வெகுவேகமாகச் சுழன்றது.

முன்பு வடார்க்காடு பகுதியில் வட்டார வளர்ச்சி அலுவலராக இருந்தவரும் இப்போது கதர் துறையில் பணிபுரிபவருமான அதிகாரி ஒருவர், சிறையில் நூற்பு வேலை — காகிதம் செய்தல் ஆகியவைகளைப் பார்வையிட இன்று வந்திருந்தார்.

எங்களுடைய நூற்பு வேலையைப் பார்த்து மகிழ்ந்தார்.

இன்று பிற்பகல், துணைமேயர் கபாலமூர்த்தி என்னைக்காண வந்திருந்தார்.

இன்று, சென்னை மாநகராட்சிமன்றத் துணைத் தலைவராக வந்த கபாலமூர்த்தி இதே சிறையில் சென்ற ஆண்டு, கைதியாக இருந்தவர்தான்!!

என்னைப்பார்த்த உடனே மகிழ்ச்சியால், குரல் தழதழத்தது, கபாலமூர்த்திக்கு.

கபாலி, குமரேசன், ராகவலு இவர்களுடன், சிந்தாதிரிப்பேட்டைப் பழங்குடி மக்கள்வாழும் பகுதியில் ஒரு பாலத்துக்குப் பக்கத்திலே நான் ஒவ்வொரு மாலையும் பேசிக்கொண்டிருப்பேன் இருபது ஆண்டுகளுக்கு முன்பு — சிந்தாதிரிப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்துக்கு நான் அப்போது தலைவன், எத்தனை உற்சாகம்! என்னென்ன பேச்சு! அந்த நாட்களில். அதே கபாலமூர்த்தி, துணைமேயர்!!

அன்று கபாலியைப் பார்த்தபோது, பாலத்தருகே உலவிய நாட்கள் நினைவிற்கு வந்தன. பேச இயலவில்லை. என் எண்ணம் முழுவதையும், விளக்கிட முதுகைத் தட்டிக்கொடுத்தேன்.

என்னிடம் எப்போதுமே கூச்சத்துடன் நடந்து கொள்ளும் பழக்கம் கபாலிக்கு — இப்போது நான் 'கைதி'யாக, கபாலி துணைமேயராக—கூச்சம் மேலும் அதிகமாகிவிட்டது. தேர்தல் நடைபெற்ற முறைபற்றி ஏதேதோ கேட்க எண்ணினேன் — எனக்கும் பேச இயலவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வதே, பேச்சைவிடப் பொருள் மிகுந்ததாக இருந்தது.

மேயர், தமது மகனுடைய திருமண சம்பந்தமாகக் கோவை சென்றிருப்பதாகக் கபாலி கூறினார். சுறுசுறுப்பாகவும் அக்கறையுடனும், பணியாற்றும்படி கேட்டுக்கொண்டேன். பணிபுரிவார் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

இன்று 'கல்கி' இதழில், ரா. கணபதி என்பவர் எழுதியிருந்த 'ஜயஜய சங்கர' என்ற தொடர் கட்டுரையைப் படித்தேன். எழுதப்பட்டுள்ளதில் முழு ஈடுபாடுகொண்டு எழுதியிருக்கிறார். சங்கரர், தமது காலத்தில், நாட்டிலே தலைவிரித்தாடிய அறுபதுக்கும் மேற்பட்ட போலி மார்க்கங்களை அழித்து, அத்வைதத்தை நிலைநாட்டினார் என்பது குறித்து, விளக்கமளித்துள்ளார். சங்கரர் பெற்றவெற்றி எத்துணை சிலாக்கியமானது என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். ஆனால் ஏற்கனவே எனக்கு ஏற்பட்ட ஒரு எண்ணம், இந்த ஏடு படித்த பிறகு மேலும் உறுதிப்பட்டது. தூய்மைப்படுத்தும் இயக்கம் எவ்வளவு வெற்றிபெற்றாலும், மீண்டும் அக்ரமம்—அநீதி—தோன்றிட முடியாத நிலையை ஏற்படுத்த முடியவில்லை — சங்கரரின் திக்விஜயம்—'வாதம்'–'பீடஸ்தாபிதம்' ஆகியவைகளுக்குப் பிறகு, அத்வைதம் அரசோச்சிய இடத்திலே 'துவைதமும்' — 'விசிஷ்டாத்வைதமும்' மலர்ந்து, மகுடம் சூட்டிக்கொண்டன என்று அறியும்போது, தூய்மைப்படுத்தும் இயக்கம், பெறும் வெற்றி, மீண்டும் கேடுகள் தோன்றிட முடியாத நிலையை ஏற்படுத்துவதில்லை என்ற என் எண்ணம் வலிவு பெற்றது. அதிலும் சங்கரர் வாதிலே வென்ற இருவர் — குமாரிலபட்டர்—மண்டனமிசிரர்—ஒருவர் முருகன்—மற்றவர் பிரம்மா—சங்கரரோ சிவன்! சிவனாரே, இந்த இருவரையும் பூலோகத்தில் இவ்விதம் அவதரித்து இருங்கள், நாம் சங்கரராக வந்து உம்மை வாதில் வீழ்த்துவோம் என்று கூறி அனுப்பினார் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே

செய்யப்பட்ட ஒரு 'ஏற்பாடு' என்று கருதக்கூடிய ஒரு நிலை! இது எனக்கு என்னமோபோலிருந்தது — சில குத்துச்சண்டை—குஸ்திச்சண்டை—ஆகியவைகளில், வெற்றி — தோல்விபற்றி முன்னதாகவே 'ஏற்பாடு' செய்துகொள்வார்களாமே! அதுபோல ஒரு தோற்ற மளிக்கிறது — கைலாயத்தில் பேசிக்கொண்டு பூலோகத்திலே வாதப்போர் நடாத்தியது. குமாரிலபட்டரும்—மண்டனமிசிரரும், குமரன், பிரமன் என்று இல்லாமல், மார்க்கத்துறையில் வேறு முறைகளை ஆக்கிய ஆசான்களாக மட்டுமே இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும் என்று தோன்றிற்று.

ஆனால், எல்லாவற்றுக்கும் தத்துவார்த்தம் ஏதாகிலும் எடுத்துக் கூறப்படக்கூடும். குமாரில பட்டரும்—மண்டனமிசிரரும் இரு பேரறிவாளர் என்று மட்டும் இருந்திருப்பின், கூறப்பட்டுள்ள நிகழ்ச்சியின் நேர்த்தி மேலும் எடுப்பாக இருந்திருக்கும் என்பதனைத்தான் சொல்கிறேன். முருகனையும் பிரம்மனையும் சிவனார் வாதத்தில் வென்றார் என்பதிலே வியந்திடவோ, பெருமைப்படவோ என்ன இருக்க முடியும். ஜயஜய சங்கரா என்ற இந்தத் தொடர் கட்டுரையில், மிக உருக்கமான பகுதியாக எனக்குப் பட்டது — சங்கருக்கும் அவருடைய அன்னைக்கும் நடக்கும் உரையாடல் பகுதி. என் சிற்றன்னையின் நினைவு வந்துவிட்டது. காஞ்சிபுரம் நகராட்சிமன்றத் தலைவராக அ. க. தங்கவேலர் வந்திருப்பதில் தொத்தா எவ்வளவு பெருமைப்பட்டிருப்பார்கள்-மகிழ்ந்திருப்பார்கள் என்பதை எண்ணிக்கொண்டேன். ஒவ்வொரு மாலையும் மணிக்கணக்கில், தொத்தா 'அரசியல்' பேசுவது தங்கவேலரிடம்தானே! தங்கவேலர், நகராட்சிமன்றத் தலைவரானபோது, 'தொத்தா' இருக்கமுடியாமற் போய்விட்டதை எண்ணி வருத்தப்பட்டேன்.

20—3—64

இன்று காலையில், போலீஸ் பாதுகாப்புடன் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன், டாக்டர் சத்தியநாராயணா அவர்கள் என்னைப் பரிசோதிப்பதற்காக அந்த நாளைக் குறிப்பிட்டிருந்தார். அவர் வரும் நேரத்திற்கு அரை மணி நேரம் முன்னதாகவே நாங்கள் போய்ச் சேர்ந்ததால், அவருடைய அறையில் நான் உட்கார வைக்கப்பட்டேன் — எனக்குப் பக்கத்தில் போலீஸ் அதிகாரி உட்கார்ந்துகொண்டார்! வலப்புறம் ஒரு போலீஸ்காரர், இடப்புறம் மற்றொருவர்; துப்பாக்கியுடன்.

டாக்டர் சத்தியநாராயணா அரை மணி நேரம் கழித்து வந்திருந்தார்—என் உடல் நிலையைக் கண்டறிந்து மகிழ்ச்சி தெரிவித்தார். ஒரு பதினைந்து நிமிட நேரம் அங்கு; பிறகு புறப்பட்டு, சிறைச்சாலை வந்து சேர்ந்தேன்.

என் உடல் நிலையைப் பொருத்தவரையில், எனக்குத் தெரிவதெல்லாம், இடக்கையிலே ஏற்பட்டுவிட்ட 'பிடிப்பு' நீங்குமா என்பதிலேயே சந்தேகம் ஏற்படும் படியாக இருப்பதுதான். வலி பெருமளவு குறைந்திருக்கிறது. ஓரோர் சமயம் வலி எடுக்கும்போது, வெந்நீர் ஒத்தடம் கொடுத்துக்கொள்கிறேன். தோழர் சுந்தரம் இதனைப் பக்குவமாகச் செய்கிறார். ஒத்தடம் கொடுத்துக்கொள்ளும்போது வலி குறைகிறது—குறைகிறது என்பதைவிட மறைகிறது என்று சொல்லலாம் — ஆனால் அடியோடு போய்விடவில்லை.

என்னைக் காண வருகின்றவர்களும் இங்கே உள்ள நண்பர்களும் நான் இளைத்து விட்டதாகச் சொல்கிறார்கள்—ஆனால் எனக்கு வலிவுக் குறைவு இருப்பதாகவோ களைப்பு ஏற்படுவதாகவோ தோன்றவில்லை. வழக்கம் போல் இரவில் நல்ல தூக்கம் இருப்பதில்லை; பசியும் சரியானபடி இல்லை, மற்றபடி தொல்லையாக எதுவும் இல்லை. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 1920-ல் வேலூர் சிறையில் மூன்று மாதம் இருந்தது பற்றி ஒரு ஏடு எழுதி இருக்கிறார்கள்—இங்குதான் கிடைத்தது; படிக்க. அதிலே அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒரு விஷயம் மிகப் பொருத்தமானது என்று கூற விரும்புகிறேன். சிறை வருகிறவர்களுக்கு, ஒன்று உடல் வலிவு இருக்க வேண்டும், மற்றொன்று பாடத் தெரியவேண்டும் என்று கூறுகிறார். முழுக்க முழுக்க ஒப்புக்கொள்கிறேன். எனக்கு இந்த இரண்டும் இல்லை. முன்பெல்லாம் பாடுவேன் வீட்டில்—சிறுவனாக இருந்தபோது — அதனால் அண்டைப் பக்கம் உள்ளவர்கள் பொறுத்துக்கொண்டார்கள். இப்போதாவது பாடுவதாவது, ஆனால் உள்ளபடி பாடத் தெரிந்திருந்தால் மிக நன்றாகத்தான் இருக்கும். காலம் ஆமையாகிவிடும் இடம் சிறை. பாடத் தெரிந்து, பாடியபடி இருந்தால், நமக்கும் மகிழ்ச்சி, கேட்பவர்களுக்கும் மகிழ்ச்சி.

அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம்	ரூ. 1-50
அரசாண்ட ஆண்டி	ரூ. 1-50
மதுரைக்கு டிக்கெட் இல்லை	ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

R99

இங்கு எனக்குப் பாடத் தெரியாதது போலவே தான், மற்றவர்களுக்கும்.

அரக்கோணம் ராமசாமி மட்டும் பாடுகிறார்—பாடத் தெரிந்தவர் என்று கூறவில்லை — பாடுகிறார். அவருக்கு ஒரே ஒரு ரசிகர்—மதியழகன். ஆனால் அதிக நேரம் பாடுவதில்லை—நல்லவர்—சீக்கிரமாகவே தூங்கி விடுகிறார்.

இங்கே, நண்பர்களில் ஒருவருக்கும் உடல் நலம் கெடவில்லை—சிறு சிறு கோளாறுகள் மட்டுமே ஏற்படுகின்றன.

மாலை வேளையில் உலவிட வசதியாக இருக்கிறது —இந்தப் பகுதிக்கு வந்த பிறகு. முன்பு இருந்த பகுதியில் அந்த வசதி இல்லை என்றாலும் நான் அப்போதும், என் அறைக்குள்ளாகவே உலாவுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தேன். நான் மருத்துவ மனையில் தங்கி இருந்தபோது, அன்பர் ம. பொ. சிவஞானம் கூறிய யோசனை அது, உடல் நலம் பெற, உலவுவது மிகத் துணை செய்யும் என்று கூறினார். உண்மைதான்·

மருத்துவ மனையில் மருந்து ஏதும் பெருமலேயே தானே, சிறை திரும்பினேன். சிறையிலே, உடலுக்கு மட்டுமின்றி உள்ளத்துக்கு வலிவும் களிப்பும் தரத்தக்க 'டானிக்' கிடைத்தது. நெல்லை, தாராபுரம் அரக்கோணம், ஆகிய இடங்களில் கிடைத்த வெற்றி பற்றிய செய்திகள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, நண்பர் ராமசாமியிடம் கடிந்துகொண்டேன் — அரக்கோணம் தேர்தல் சம்பந்தமாக மேலும் சிறிதளவு அக்கறை செலுத்தியிருக்க வேண்டுமென்று. ஆம் என்று கூறி வருத்தப்பட்டார். நகராட்சி மன்றத் தலைவர் தேர்தலில், கழக ஆதரவு பெற்றவர் வெற்றி பெற்றார் என்ற உடன், அவருக்கு மிக்க மகிழ்ச்சி. தந்திகளைக் காட்டிக் காட்டிக் களிப்படைந்தார். தாராபுரத்தில் கிடைத்த வெற்றி பற்றி நண்பர் மதியழகனுக்கு ஒரே மகிழ்ச்சி. பட்டக்காரரின் பரிபாலனத்துக்கு உட்பட்ட பிரதேசம் என்பார்கள், தாராபுரம் பகுதியை. அங்குக் காங்கிரசுக்கு வீழ்ச்சி. மதியழகன் மகிழ்வதிலே பொருத்தம் இருக்கத்தான் செய்கிறது. நெல்லை, கழக எழுச்சி மிக்க இடமாகி வருவதை, இந்தி எதிர்ப்பு மாநாட்டின்போதே நான் கண்டு பெருமிதம் கொண்டவன். அங்கு நகராட்சி மன்றத் தலைவராகக் கழகத் தோழர் ஒரு இளைஞர், இஸ்லாமிய சமூகத்தினர் வெற்றி பெற்றிருப்பது, பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது. நெல்லை உணவு விடுதியில் என்னைச் சூழ்ந்துகொண்டு உற்சாகமாக உரையாடிய கழக நண்பர்களை எல்லாம், நான் இங்கிருந்தபடியே காணமுடிகிறது. ஓடி ஆடிப் பணியாற்றும் மஸ்தானும், வாடிவிடத்தக்க அளவு பணியாற்றினாலும் புன்னகையை இழக்காத இரத்தினவேலு பாண்டியனும், மற்றத் தோழர்களும், என் எதிரே நின்றுகொண்டு, "எப்படி அண்ணா! நெல்லை!!" என்று கேட்பதுபோலவே தோன்றுகிறது. ஆச்சாரியார் இந்தியைப் புகுத்திய நாட்களிலே தொடுக்கப்பட்ட இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது, நாவலர் சோமசுந்தர பாரதியாருடன் நான், நெல்லையில் பிரசாரம் செய்யச் சென்றிருந்த நாட்களை எல்லாம் எண்ணிக் கொண்டேன்.

என்னுடைய பழம் பெரும் நண்பர் திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம் இன்று என்னைக் காண வந்திருந்தார். இடையில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தவர் என்றாலும், மற்றச் சிலர் போல, என்னிடம் தனிப்பட்ட முறையில் பகை கக்கினவரல்ல. இப்போது அவர், எப்போதும்போல, நம்மிடம் கருத்து ஒற்றுமை கொண்டிருக்கிறார் என்று எண்ணுகிறேன். திருப்பூரில், நமக்குற்ற 'ஒரே' நண்பராக, அவர் இருந்த காலம் ஒன்று உண்டு. இன்று தொழில் துறையில் முனைந்து நிற்கும் நண்பரிடம், சிறிதுநேரம் அளவளாவும் வாய்ப்புக் கிடைத்தது. முன்பு ஜப்பான் நாட்டுக்குப் போய் விட்டு வந்தபோது அவரைச் சந்தித்தேன். தமது பயணம் பற்றி ஒரு நூல் எழுதவேண்டும் என்று கூறியிருந்தேன். அதுபற்றி இப்போதும் கேட்டேன் — எழுத நேரம் கிடைக்கவில்லை என்றார். நான் சொல்வது அவரை நூல் எழுதும்படி — அவர் ஈடுபட்டிருப்பது, நூலாலைத் தொழில் — அதனால்தான் நேரம் கிடைக்கவில்லை.

வெளியே செய்யவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. இங்கு வந்து அடைபட்டுக் கிடக்கிறோமே என்ற எண்ணம் தோன்றும்போதெல்லாம் கவலையாகத்தான் இருக்கிறது — ஆனால் நாம் மேற்கொண்டுள்ள பணியின் தூய்மையை மக்கள் உணர்ந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது அறப்போர் என்று உணரும்போது, சிறையில் அடைபட்டுக் கிடப்பதும் தேவையான ஒரு திருப்பணி என்ற எழுச்சி பெறுகிறோம். ஆளுங்கட்சியும், நமது நாட்டு இதழ்களும் காரணமற்று நம்மிடம் கசப்பு கொண்டுள்ள நிலையி

விற்பனையாளர்களுக்கு

மணியார்டர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

Proprietor:
"KANCHI"
L. Kancheepuram.

லிருந்து விடுபட்டு இந்தி எதிர்ப்புணர்ச்சி எந்த முறையில் இருக்கிறது என்பதனை இந்தி ஆதிக்கக்காரர்கள் உணருவதற்காக, நமது அறப்போர் குறித்து உண்மையை உரைப்பார்களானால், பிரச்சினையின் சிக்கலில் பெரும் பகுதி தீர்ந்துபோகும். ஆனால் ஆட்சியாளர்களின் மனம் மாற மறுக்கிறது; நாம் மேற்கொண்டுள்ள பணியைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதனைத்தான் அவர்கள் போக்கு காட்டுகிறது.

21—3—64

இன்று இங்குள்ள டாக்டர் எனக்கு ஊசிபோட்டார்—இளைப்புபோக; டாக்டர் நடராசன் குறிப்பிட்டிருந்தாராம் இதுபோல ஊசி போடும்படி. டாக்டர் இளைஞர் என்றாலும் பக்குவம் அறிந்திருக்கிறார். மேலும் சில ஊசி போடுவார் போலிருக்கிறது.

இன்று மாலை, நாவலரும் கருணாநிதியும் அன்பழகனை வந்துபார்த்தார்கள், கழக நிலைபற்றியும், குறிப்பாகத் தேர்தல்கள் குறித்தும், பேசிவிட்டுச் சென்றார்கள் என்று அறிந்துகொண்டேன். இருவருமே இளைத்துப்போய் களைத்துப்போய் காணப்பட்டார்கள் என்று அன்பழகன் கூறினார். வேலைப்பளுவும், பிரச்சினைகளின் சிக்கலால் ஏற்பட்டுவிடும் தொல்லைகளும் அவர்களை வாட்டி எடுக்கும் என்பதை உணருகிறேன். ஆனால் இந்தக் கட்டத்தை அவர்கள் மிகச் சிறந்த ஒரு பயிற்சி வாய்ப்பு என்ற முறையில் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். கழக நிர்வாக சம்பந்தமான அலுவல்களிலிருந்து நான் என்னை விடுவித்துக்கொண்டால், கழக வளர்ச்சிக்காக மேலும் சிறந்த முறையில் நாடெங்கும் சுற்றிச் சுழன்று பணியாற்றமுடியும். இந்த என் விருப்பம் நிறைவேற வேண்டுமானால கழகத்தின் நிர்வாக அலுவல்களை மேற்கொள்ள மற்றவர்கள் முனையவேண்டும். நான் சிறைப்பட்டிருக்கும் நாட்களை இதற்கான வாய்ப்பாகக் கொண்டிடவேண்டும் என்று விரும்புகிறேன்.

கழக நிர்வாகத்திலே வந்துள்ள நகராட்சிகளிலே, புது முறைகளைப் புகுத்தி, கழகம் ஆட்சி நடத்தும் தகுதி வாய்ந்தது என்பதனை மக்கள் உணரும்படிச் செய்திடவேண்டும் என்று இங்கு ஆர்வத்துடன் நண்பர்கள் பேசிக்கொள்கிறார்கள். பெல்ஜியம் நாட்டிலே, ஒரு கட்சி நகராட்சி ஒன்றிலே நடத்திக்காட்டிய நிர்வாகத்தின் தரத்தையும் திறத்தையும் கண்டு, நாடாளும் வாய்ப்பையே அந்தக் கட்சிக்கு மக்கள் அளித்தனர் என்று ஏதோ ஒரு ஏட்டிலேதான் படித்ததாகப் பொன்னுவேல் கூறினார். கட்சி மாச்சரியம் காரணமாக, சென்னை மாநகராட்சி நிர்வாகத்தை நடத்திய கழகத்தின் மீது ஆளுங்கட்சியினர் அபாண்டங்கள் சுமத்தினர் என்றாலும், பொதுவாக நமது கழகத் தோழர்கள் மெச்சத்தக்க முறையிலேயே மாநகராட்சி மன்ற நிர்வாகத்தை நடத்தி இருக்கின்றனர் — தவறுகள் செய்திருந்தால், மேலே உட்கார்ந்துகொண்டிருக்கும் காங்கிரசு அரசு; சும்மா விட்டிருக்குமா? மாநகராட்சி மன்ற நிர்வாகத்தையே கலைத்துவிட்டிருக்குமே! குற்றம் கண்டுபிடிக்க இயலாத முறையிலேதான் நிர்வாகம் நடத்தப்பட்டிருக்கிறது என்று நான் கூறினேன். இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை முனுசாமி நல்ல முறையிலே அமைத்திருக்கிறார் என்பதை "இந்து" இதழேகூட எடுத்துக்காட்டியிருந்தது என்று நண்பர்கள் நினைவுபடுத்தினார்கள். ஆமாம்! தேர்தலை மனதிலே வைத்துக் தயாரிக்கப்பட்ட 'பட்ஜட்' என்று 'இந்து' குத்தலாகக் கூட எழுதிற்று; ஆனால் மக்களாட்சி முறையில் மக்களைத் திருப்திப்படுத்தும் விதமாக 'பட்ஜட்' தயாரிப்பது குற்றமல்ல என்று நான் சுட்டிக்காட்டினேன்.

"ஏதேதோ வீண் பழிகளைச் சுமத்துகிறார்கள்; ஒரு மாட்டை அடித்துக் கொன்றுவிட்டார்கள் கழகத்தார்—மாடு காங்கிரசின் தேர்தல் சின்னம் என்பதற்காக"

"இது நடைபெறவே இல்லை. அபாண்டம் என்று கருணாநிதி அறிக்கை வெளியிட்டிருந்தார்; மெயில் இதழிலே வெளியிட்டிருந்தார்கள்"

"ஆமாம் — அப்படியே முறைதெரியாத யாரோ சிலர் அதுபோலச் செய்திருந்தால்கூட, அது கண்டிக்கத் தக்கது என்றாலும், அதற்காக கழகத்தை அதற்குப் பொறுப்பாக்கிக் கண்டிக்கலாமா?" என்று கூட மெயில் எழுதியிருந்தது.

"இன்று பத்திரிகையிலே பார்த்தீர்களா அண்ணா! அமெரிக்காவிலே ஒரு அரசியல்கட்சி, எதிர்க்கட்சியின் தேர்தல் சின்னமாகஉள்ள யானையை மனதிலே வைத்துக்கொண்டு, கட்சி விழா விருந்தில், 'யானைக்கறி' சமைக்கப்போவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆப்பிரிக்காவிலே வேட்டையாடிக் கொன்று, யானைக்கறியைப் பதப்படுத்தி அமெரிக்காவுக்குக் கொண்டுவர ஏற்பாடாம்"

'காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா ரூ. 10—00
ஆறுமாத சந்தா ரூ. 5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

"இதுபற்றி கண்டனத்தலையங்கம் எழுதககாணோம் —நடக்காத ஒன்றை வைத்துக்கொண்டு நமது கழகத்தைக் கண்டிக்கிருர்கள்"

இப்படி நண்பர்கள் பேசிக்கொண்டனர். உழைப்பாளி கட்சிக்குச் சின்னம் 'கோழி'—உழைப்பாளி கட்சியும், கோழிச் சின்னம் கொண்டிருந்த சில சுயேச்சையாளரும் தேர்தலில் தோற்றபோது, காங்கிரசார் நடத்திய வெற்றி ஊர்வலத்தில், கோழியை அறுத்துத் தூக்கிக்கொண்டு போனுர்கள் என்று நான் கூறினேன்.

"நம்முடைய கழகத்திடம் மட்டும் இந்த அளவுக்குப் பகை உணர்ச்சிகொள்ளக் காரணம் என்ன?" என்று நண்பர்கள் கேட்டனர்.

"காரணம் இருக்கிறது. நாற்பது ஆண்டுகளாக எதிர்த்துவந்தார் பெரியார், காங்கிரசை; காங்கிரஸ் ஒழிப்புநாள், சுதந்திரம் பெற்ற துக்கநாள், என்றெல்லாம் நடத்திஞர். அவரே ஓய்ந்துபோய், நம்பிக்கை இழந்துபோய், காங்கிரசை ஆதரிக்க முனைந்துவிட்டார். காங்கிரஸ் முதலாளிகளின் முகாம் என்று முழக்கமிடும் கம்யூனிஸ்டு கட்சியும் முற்போக்கு அணி அமைப்போம் என்று கூறிக்கொண்டு காங்கிரஸ் எதிர்ப்பைத் தளர்த்திவிட்டது; ஜெயப்பிரகாஷ் நாராயணன் அரசியலே வேண்டாம் என்று ஒதுங்கிக்கொண்டார்; அசோக் மேத்தா 'ஆலோசகர்' ஆக்கப்பட்டுவிட்டார்; இப்படி பலப்பலர், இணைந்து போகிருர்கள், பணிந்துபோகிருர்கள், இந்தக் கழகம் மட்டும் காங்கிரசைக் கடுமையாக எதிர்த்து வருகிறதே; மக்களின் பேராதரவு கழகத்துக்குப் பெருகிவருகிறதே என்பதை எண்ணிப் பார்க்கும் போது காங்கிரசுக்கு நம்மீது கடுங்கோபம் எழத்தானே செய்யும்; அதனுல்தான் பகை கொட்டுகிருர்கள், பழி சுமத்துகிருர்கள் என்று நான் விளக்கிப் பேசினேன்.

நண்பர்கள் இது குறித்து நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆட்சியாளர் எத்தனை பகை கக்கினுலும், மக்களின் ஆதரவு நமக்கு இருக்கிறவரையில், நாம்கவலைப் படத்தேவை இல்லை, என்று பேசிக்கொண்டோம். இரவு அறைக்குள் பூட்டப்படும்போது, மக்கள் ஆதரவு கழகத்துக்குத்தா[illegible] இருக்கிறது என்பதை மெய்ப்பிப்பதுபோல, ஒரு கா[illegible]வலாளி, "வேலூரிலும் உங்க கட்சிதான் சேர்மனும்—யாரோ சாரதியாம்" என்று கூறினர்.

பொதுவாக, அறையிலே எங்களைப் போகச் சொல்லிவிட்டு, பூட்டும்போது, அந்த காவலாளிமீது எங்களுக்கு இலேசாகக் கசப்பு ஏற்படும், அன்று 'தேன்'கொடுத்துவிட்டதல்லவா, அறையைப் பூட்டினர்; அதனுல் மகிழ்ச்சியுடன் அவரை வாழ்த்தியபடி 'கூண்டுக்குள்' சென்றுவிட்டோம்.

23—3—64

இரண்டு நாட்களாக, ராகுல சாங்கிருத்தியாயன் என்பவர் எழுதியுள்ள வால்காவிலிருந்து கங்கைவரை என்ற நூலைப் படித்துக்கொண்டிருக்கிறேன் அதனுலே குறிப்பு ஒரு நாள் எழுதவில்லை.

பகலில் படிப்பதற்கு அதிகநேரம் கிடைப்பதில்லை. காலையிலிருந்து மாலை நாலரை மணி வரையில், நூற்பு வேலை இருக்கிறது. இரவு மட்டுந்தான் படிக்க வசதி கிடைக்கிறது.

சங்கரவிஜயம் படித்துமுடித்தவுடன், இந்தப் புத்தகம்—அதாவது முற்றிலும் வேறுன ஒரு கருத்துலகில் உலவுகிறேன். சமுதாய வளர்ச்சியை விளக்கும் இந்த ஏடு எழுதியவர் லெனின்கிராட் சர்வகலாசாலையில்

7-ம் பக்கத் தொடர்ச்சி

"கேட்கும்போதே மனம் பகீர் என்கிறது பட்டு! பாவம்; இந்தப் பெரிய இடியை அந்த சம்பந்தம் எப்படித்தான் தாங்கிக்கொள்ள முடிந்ததோ, தெரியவில்லை......"

"கொள்கையிலே இருக்கிற பற்று! நல்லதற்கு உழைக்கிறோம் என்ற நம்பிக்கை! மக்களுக்காக எதையும் தாங்கிக்கொள்ளவேண்டும் என்ற உறுதி! இவைதான் காரணம்......"

"பலே! பலே! பொன்னி! ஏது! இப்படிப் பேசிப்பேசி, ஏழுவைக் கிளப்பிக்கொண்டு போய்விடுவாய் போலிருக்கிறதே. என்ன ஏழு! தயாராகிவிட்டயா நீயும்..."

"என்னமோ பொழுதுபோக்காக பேசிக்கொண்டிருந்தோம், வேறென்றுமில்லை......"

"பொன்னி! ஏன், அவர் கேட்கிற போது, அவ்வளவு பயந்து பதில் சொல்லனும். சொல்லேன் தைரியமாகத்தான்......"

"அவ பெண்ணடி ஏழு! உன்னைப் போல அல்ல......"

"அவ பொண்ணு! நானு? மண்ணு...!"

"என்ன இது, இந்தி எதிர்ப்புப் போருக்குப் பதிலாக, இங்கே இவர்கள் இரண்டுபேருக்குள்ளே போ மூண்டுவிடும்போல இருக்குதே, பொன்னி! வா! வா! நாம் போய்விடுவோம்......"

"அது யாரு? வக்கீலா! நாங்க இரண்டுபேரும் எப்பவும் இப்படிப் பேசிக்கொள்கிற வழக்கந்தான்... இது சண்டைன்னு எண்ணிக் கொண்டயா......"

"அவ கன்னிப் பெண்தானே! விவரம் புரியாது......",

"பொன்னி! நீ இப்ப வரப்போறியா இல்லையா......?"

"வா! வா! போவோம்......வருகிரேம் ஏழு!"

o

பேராசிரியராகப் பணியாற்றிய பேரறிவாளர், கதை வடிவத்தில், கி. மு. 6000-த்திலிருந்து கி. பி. 1942-வரையில், மனிதசமுதாய வளர்ச்சிக்கான விளக்கம் தந்திருக்கிறார்—பொதுஉடைமையாளரின் கோட்பாட்டின் அடிப்படையில்.

குறிப்பு எழுதாமலிருந்ததற்கு மற்றோர் காரணமும் உண்டு, காய்கறி நறுக்கியதால், என் வலது கரத்தின் ஆள்காட்டி விரலில் சிறிதளவு காயம் ஏற்பட்டுவிட்டது—முன்பு ஒரு நாளையக் குறிப்பிலே எழுதியிருந்தேனல்லவா, சட்டை கிழிந்து விடுவதற்கும் சதை பிய்ந்து விடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று; அதனை நானே உணருவதற்கான ஒரு வாய்ப்பு சிறிதளவுதான் சதை பிய்ந்துவிட்டதென்றாலும், எறிச்சல் அதிகமாகி விடவே, எழுத இயலவில்லை. ஏதோ மருந்து அளித்தார்கள்—இயற்கையாகவே குணமாகி வருகிறது.

இன்று இங்கு நண்பர்கள், கழகப் பிரசாரத்துக்காக நாடகங்கள் நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து மெத்த ஆர்வத்துடன் பேசிக்கொண்டிருந்தார்கள். முன்பு நானும் நமது நண்பர்களும் நடத்திக்கொண்டு வந்த நாடகங்களை, இனி நடத்துவதற்கு அனுமதிக்க மாட்டார்கள்—நாடக தடைச் சட்டம் மிகக் கண்டிப்பான முறையிலே அமைந்துவிட்டிருக்கிறது—என்றாலும் அனுமதிக்கப்படும் அளவுக்கு புதிய நாடகங்கள் தயாரித்து நடத்தவேண்டும்என்று பேசிக்கொண்டோம்.

மாநகராட்சி மன்றத் தேர்தலின்போது மறைந்த நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணனின் திருமகன் என். எஸ். கே. கோலப்பன் நடத்திய 'வில்லுப் பாட்டு' மிக்க சுவையும் பயனும் அளித்ததாக நண்பர்கள் கூறினார்கள். நான் இரண்டொரு முறை கேட்டிருக்கிறேன், சுவையாகவே இருக்கிறது — தந்தையின் 'பாணி' அப்படியே அமைந்திருக்கிறது என்று கூறினேன்.

திங்கட்கிழமை பரிமளம் வரக்கூடும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்-வரவில்லை.

செவ்வாய் மாலையில், பரிமளம், இளங்கோவன், கே. ஆர். ராமசாமி வந்திருந்தனர். மூவருக்கு மேல் அனுமதிக்கப்படுவதில்லை; அதனால் என்னைக் காண வந்திருந்த அடிகள், வெளியிலேயே நிறுத்தப்பட்டு விட்டார் என்று கூறினார்கள். வீட்டிலுள்ளோரின் நலன் பற்றியும், பொது விஷயங்கள் குறித்தும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

திரு. மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் எழுதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்ட 'தீங்கியல் சட்டம்' என்ற நூலை, அன்பர் சுப்பையா அவர்கள்; தந்தனுப்பியதாகக் கூறி, அந்த புத்தகத்தைப் பரிமளம் தந்தான். பத்திரிகையில் அந்த புத்தகம் பற்றிப் படித்ததிலிருந்து அதைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தேன். நான் எதிர்பாராமலேயே அந்தப் புத்தகம் கிடைத்திருக்கிறது. மத்த மகிழ்ச்சி.

நண்பர்கள், டில்லி பாராளு மன்ற நடவடிக்கைகள் குறித்து மெத்த ஆவலுடன் என்னிடம் கேட்டறிந்தார்கள். அடுத்த முறை அதிக அளவில், பாராளு மன்றத் தேர்தலில், நமது கழகம் ஈடுபட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இன்று பிற்பகல்; அரக்கோணம் ராமசாமி, 'இரத்தக் கொடை' அளித்தார். கட்டுடல் பெற்ற அவருக்கு, அதனால் எந்தவிதமான களைப்பும் ஏற்படவில்லை. வெளியில் இருக்கும்போதே 'குருதிக் கொடை' தர விரும்பினாராம் — இங்கே அதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

மேலவைகளுக்கான தேர்தல்களில் பங்குகொள்ள 'பரோல்' பெறக்கூடும் என்று எண்ணிக்கொண்டிருந்த மதியழகன் — ராமசாமி — இருவருக்கும், இன்றைய பத்திரிகையில், முதலமைச்சர் 'பரோல்' தருவது இயலாது என்று வெளியிட்டிருந்த அறிவிப்பு, கிடைத்தது.

முதலமைச்சர், 'பரோல்' தர மறுத்துவிடுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை-எனவே அவருடைய அறிவிப்பு எனக்கு ஏமாற்றத்தைத்தான் தந்தது—பொதுமக்களும் இது கண்டு எரிச்சல் அடைந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

கள்ளநோட்டு வெளியிட்டவர்களுக்குக்கூட கேட்கும்போது 'பரோல்' கிடைக்கிறது! நமது கழகத் தோழர்கள் விஷயத்திலேதான், அமைச்சர்கள் தமக்கு உள்ள கண்டிப்பு அவ்வளவையும் காட்டி வருகிறார்கள்.

இன்று காலை வழக்கம்போல, சிறை மேலதிகாரிகள் கைதிகளைப் பார்வையிடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

குறளாராய்ச்சிக்கு இடையில், நண்பர் அன்பழகன் நான் படித்து வியந்த; 'மாமன்னரின் மருத்துவன்' என்ற ஆங்கிலநூலை (கிருத்துவமார்க்கத் துவக்க காலக் காதை)ச் சுவைத்துப் படித்து வருகிறார்.

25—3—64

இடது கரத்திலே வலி குறையக் காணோம். சுடுநீர் ஒத்தடம் கொடுத்துக்கொண்டேன் — அப்போதைக்கு இதமாக இருக்கிறது. வெளியே சென்றதும், தக்க மருந்து உட்கொண்டு வலியை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று நண்பர்கள் அன்புடன் கூறி, பல்வேறு மருத்துவ முறைகள் குறித்துக் கூறினார்கள்.

செங்கற்பட்டு உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் தேர்தலில், கழகத்தின் சார்பில் நண்பர் ஆசைத்தம்பி ஈடுபட்டிருக்கும் செய்தி பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். வாய்ப்பு எப்படி இருக்கும் என்பதுபற்றி கணக்கிட்டுப் பார்த்துக்கொண்டோம். செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றத் தலைவராக இருந்தவரும் அந்த மாவட்டத்திலே பல ஜெமீன் குடும்ப ஆதரவு பெற்றவரும், அமைச்சர்களின் அரவணைப்பைப் பெறக்கூடியவருமான வி. கே. ராமசாமி முதலியார் போட்டியிடுவதால், மெத்தக் கடினமாகவே இருக்கும் என்று நண்பர்கள் கூறினார்கள்; எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.

அண்ணன்,

அண்ணாதுரை

மறைந்த கென்னடி

முகப்பு விளக்கம்

நெஞ்சு நடுக்குற, நீர்விழிசேர
நைந்திடு இதய நிலையினராகி
உலகினர் உருகிட, உலுத்தன்குண்டதால்
உயிரிழந்திட்டார், உத்தமத் தலைவன்:

○

பாரெல்லாம் பரிவரசு காணஎண்ணி
பக்கமதில் பாவையுடன் பவனிவந்த
பண்புமிகுத் தலைவனவன் கென்னடியை
பாவிமகன், துணிந்தனனே, சுட்டுவீழ்த்த.

○

அமைதியோடு இன்பமது பெற்றுலகு
அறக்கோட்டமாகிடவே வழிகள் தேடி
அயராது உழைத்துவந்த அருந்தலைவன்
உயிர்குடிக்க மடமகனை ஈன்றதுலகு அந்தோ!

○

போரற்ற, புகையற்ற, பொல்லாங்கற்ற
புதுஉலகு காண்பதுவே குறிக்கோளென்று
கூறினனே! குறுமதியோர் திருந்தத்தானே
குண்டுகளோ அவன்மார்பில்! அந்தோ! அந்தோ!

○

வாழ்வளிக்க அரசுகண்டோம்; அழிவுக்கல்ல
வல்லமையைக் காட்டிடுவோம் வறுமைநீக்க
வையகத்தில் வளங்களுண்டு மிகுதியாக
வற்றிடுமேல் விண்வெளியில் உண்டு கோடி

○

சென்றிடுவோம்! வென்றிடுவோம்! எட்டுத்திக்கும்
செருமுனையில் நின்றல்ல; சேர்ந்துழைத்து;
இன்றிதுவே நம்முன்னே உள்ளவேலை
வந்திடுவீர் அனைவருமே என்றான் வீரன்.

○

புத்தம் புதிய குரலிதுகாண்
புவிக்கு இஃதே நல்லிசையாம்
புன்மைப் போக்கை விட்டிடுவோம்
புனிதப் போரில் பங்கேற்போம்.

○

என்று பற்பல நாட்டினிலுள்ளோர்
இயம்பினர்; இசைந்தனர் சொற்கேட்டு
புன்னகை பூத்திடும் பூங்காவாய்
புவியினை மாற்றிட முனைந்தனரே!

○

பூங்காற்று அளித்திடும் ஓர்இன்பம் கண்டு
பொழுதுசாயும் வேளையிலே, துயிலும்போது
புற்றரவு கடித்துயிரைக் குடித்தல்போல
கொன்றானே கென்னடியைக் கொடியோன்தானும்

○

தாங்கொணாத துயரதுவும் தாக்கிற்றய்யோ!
தாரணியில் கதறுதார் உண்டோ அம்மா!
கண்ணெதிரே கணவன் சாகக்கண்ட
காரிகையின் மனம் சுக்குநூறாயிற்றன்றோ!

○

அழுதனர்! அழுதனர்! விழிகள் அறுபட!
தொழுதனர்! தொழுதனர்! தூயவன் தாளினை!
சென்றனன்! சென்றனன்! சீலன், புகழ்புரி!
சென்றன நாட்களும் சென்றன! விரைந்து.

○

ஓராண்டானது உத்தமன்தான் மறைந்து
பாராண்டிடவல்லான் படுகொலையால் வீழ்ந்து
காருள்ளமட்டும் அவன்பேர் இருக்கும் எனக்கூறி
தூயவர்கள் நிற்கின்றார், கண்கசிந்து, துதிபாடி.

○

வியந்தவனைப் புகழ்ந்திடுதல் போதுமோ, ஐயா!
விட்டஇடம் தொட்டுத் தொடர்ந்திடுவோம் வாரீர்!
கென்னடி பெரும்பணியும் வெற்றிபெற வேண்டும்
கேடற்ற உலகமதை நாம்காண வேண்டும்.

○

மருதன்

காஞ்சி பொங்கல் மலர்

கருத்துக்கு நல்விருந்து

நெஞ்சை அள்ளும்
சிறுகதைகள்
தெளிவளிக்கும்
கட்டுரைகள்
இன்சுவை மிகு
கவிதைகள்

பொங்கல் மலர் முல்லை மணம்
முக்கனிச் சாறு
முத்துப்பேழை

கருத்துச் சோலையில் உலவிட!
முத்தமிழ்ச் சுவை பருகிட!

அளித்திடும்
படைப்புகள்
நிறைந்த
அறிவுப் பெட்டகம்

காஞ்சி
பொங்கல் மலர்
தேவை குறித்து இன்றே தெரிவித்திட வேண்டுகிறோம்

[illegible] 30, [illegible] தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) [illegible]
[illegible]